# பொள்ளாச்சி நகராட்சி

## 13.06.2018 ல் நடைபெற்ற அவசரக் கூட்ட தீர்மானம்

963) பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் பாதாள சாக்கடை திட்டத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு, திட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு 16050 வீட்டு இணைப்புகளும் கூடுதலாக 3950 வீட்டு இணைப்புகளும் ஆக மொத்தம் 20,000 வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட நிதி நம்பகத் தன்மைக்கேற்ப பாதாள சாக்கடை இணைப்பிற்கான வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர சேவை கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.37, நாள்–05.01.2017ல் அனுமதி வழங்கப்பட்டு அதனை தொடர்ந்து அதற்கான உபவிதிகளை செயல்படுத்திட இந்நகரமன்ற தீர்மானம் எண்.226, நாள்–28.04.2017ல் அனுமதிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் ந.க.எண்.1141/2017/பா.சா.தி–2, நாள்–26.09.2017 முதன்மை ஒப்புதல் வழங்கப்பட்டு கோவை மாவட்ட அரசிதழ் எண்.1, நாள் 29.01.2018ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் பாதாள சாக்கடை திட்ட நிதி ஆதாரத்தில் 10.54 கோடி கடன் மற்றும் 10.54 கோடி நகராட்சி பங்குத் தொகை ஆக மொத்தம் 21.08 கோடி நகராட்சி செலுத்த வேண்டி உள்ளது, மேலும் பாதாள சாக்கடை திட்ட வீட்டு இணைப்பிற்கு 13.62 கோடி செலுத்த வேண்டியுள்ளது. பாதாள சாக்கடை திட்ட வைப்புத் தொகையினை மூன்று தவணைகளில் வசூல் செய்து கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் 24.10.2016 தேதியில் நடைபெற்ற பாதாள சாக்கடை திட்ட ஆய்வுக் கூட்ட நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே திட்டத்தினை உடன் செயல்படுத்த வேண்டிய அவசியம் கருதி வைப்புத் தொகை செலுத்தாத வீட்டு உரிமையாளரிடமிருந்து வைப்புத் தொகையினை மூன்று சம தவணைகளில் வசூல் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

1. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 24.10.2016 தேதியில் ஆய்வுக்கூட்ட அறிவுரைப்படி மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்: இ1 / 2006 /2018**

964) பொள்ளாச்சி நகராட்சியில் பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதாரப் பிரிவில் கீழ்க்கண்ட வாகனங்கள் வாங்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. மேற்படி வாகனங்களுக்கான பராமரிப்பு செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் - **2652/2018/பி2 நாள் 13.05.2018 ல்** இவ்வாறான வாகனங்களை கழிவு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் வாகனங்களை கழிவு செய்திட உரிய பிரேரணைகளை தானியங்கி பணிமனை பொறியாளர் கோவை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகனத்தின் பணிப்பயன்பாடு | வாகனத்தின் வகை | வாகனத்தின் பதிவு எண் | வாகனம் வாகங்கப்பட்ட வருடம் |
|---|---|---|---|---|
| 1 | பொதுப்பணி லாரி/இயந்திரங்கள் | பெரிய லாரி(AsokLeyland) | TN 41 B 3477 | 21.12.94 |
| 2 | குடிநீர் பிரிவு வாகனங்கள் | டேங்கர் லாரி (ped Ford) | MDE 9282 | 12.03.65 |
| | | டேங்கர் லாரி (Leyland) | TN 41 3443 | 29.08.1990 |
| 3 | துப்புரவு /திடக்கழிவு மேலாண்மை | வேன்(மெட்டடர்) I-PP V | TN 41 C 3948 | 25.02.96 |
| | | பெரிய லாரி(Tata Benz) டிப்பர் | TN 41 E 0190 | 17.10.97 |
| 4 | | டம்பர் பிளேசர்(Tata) | TN 41 Q 3920 | 06.07.2006 |
| | | டம்பர் பிளேசர்(Leyland - E-comet) | TN 41 Q 3007 | 09.06.2006 |
| | | குடிநீர் லாரி to Converstion டம்பர் பிளேசர் (Leyland) | TN 41 B 2134 | 17.04.1994 |
| | | பெரிய லாரி to Converstion டம்பர் பிளேசர்ர (Leyland) | TN 41 B 3478 | 21.12.1994 |
| | | TIPPER to convertion காம்பேக்டர்(tata) | TN 41 N 6390 | 22.09.2006 |
| | துப்புரவு /திடக்கழிவு மேலாண்மை | பெரிய லாரி toconvertion காம்பேக்டர் (Leyland - E-comet) | TN 41 H 3040 | 14.10.1999 |
| | | கார் (Ambasidor) | TN 41 2200 | 20.03.1990 |
| | | கழிவு நீர் டேங்கர் (tata Benz) | TN 41 F4779 | 10.02.1999 |
| | | MINI Lorry tata - 407 | TN 41 E 0191 | 17.10.97 |
| | | Lorry - Benz | TN 41 8012 | 13.11.91 |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்: எச்1 / 2153 /2018**